# நட்சத்திர குணாதிசயங்கள்...!!

## 27 நட்சத்திரங்கள்..!

ஜோதிட சாஸ்திரத்தில் மிக மிக முக்கியமானது நட்சத்திரம் ஆகும். கிரகங்களை விட நட்சத்திரங்களுக்கு வலிமை அதிகம். ஒருவருடைய ஜாதகம், அவர் பிறந்த நட்சத்திரத்தின் அடிப்படையில்தான் அமைகிறது.

ஒருவர் எந்த நட்சத்திரத்தில் பிறந்துள்ளாரோ அந்த நட்சத்திரம் எந்த ராசிக்கு உரியதோ அதுவே அவரது ஜென்ம ராசியாகும். ராசிகள் மொத்தம் 12 உள்ளன. மொத்த நட்சத்திரம் 27 ஆகும். இங்கு ஒவ்வொரு நட்சத்திரமும் 4 பாதங்களாகப் பிரிக்கப்பட்டு 1,2,3,4 பாதங்கள் என்று குறிக்கப்படுகின்றன.

### பாதம் என்றால் என்ன?

ஒரு நட்சத்திரத்தின் ஒளிக்கற்றைகளை பிரிப்பதே பாதங்கள் ஆகும். நட்சத்திர ஒளிக்கற்றைகளை நான்காக பிரிப்பார்கள். அதனால்தான் 4 பாதங்கள் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு நாழிகை தான் அதிகளவில் கணக்கு எடுத்துக் கொள்ளப்படும். அதாவது தோராயமாக ஒரு நட்சத்திரம் என்றால் 60 நாழிகைகள் இருப்பதாக எடுத்துக் கொண்டோமானால் அதை நான்காக பிரிக்கும் பொழுது ஒரு நட்சத்திரத்தின் ஒரு பாதம் என்பது முதல் 15 நாழிகைகள் ஆகும். அடுத்த 15 நாழிகைகள் என்பது அதே நட்சத்திரத்தின் இரண்டாம் பாதம் என்று அழைக்கப்படும். இதேபோன்று அதே நட்சத்திரத்தின் மூன்றாம் பாதம், நான்காம் பாதம் அடுத்தடுத்த 15 நாழிகைகளாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

### 27 நட்சத்திரங்கள்:

1. அஸ்வினி
2. பரணி
3. கார்த்திகை
4. ரோகிணி
5. மிருகசீரிஷம்
6. திருவாதிரை
7. புனர்பூசம்
8. பூசம்
9. ஆயில்யம்
10. மகம்
11. பூரம்
12. உத்திரம்
13. அஸ்தம்
14. சித்திரை
15. சுவாதி
16. விசாகம்
17. அனுஷம்
18. கேட்டை
19. மூலம்
20. பூராடம்
21. உத்திராடம்
22. திருவோணம்
23. அவிட்டம்
24. சதயம்
25. பூரட்டாதி
26. உத்திரட்டாதி
27. ரேவதி

## இராசி மண்டலம்!!

ஒரு இராசி மண்டலம் என்பது 360 பாகைகளை (டிகிரி) கொண்டது. இந்த இராசி மண்டலத்தில் 30 டிகிரியை கொண்டது ஒரு இராசி ஆகும். மண்டலத்தில் உள்ள 27 நட்சத்திரங்கள் சமமாக ஒவ்வொரு இராசிக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பகிரப்பட்ட நட்சத்திரங்கள் பாதங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாதத்துக்கும் ஒரு குறிப்பிட்ட டிகிரிகள் வழங்கப்பட்டு 12 ராசிகளில் இடம் பெறுமாறு செய்யப்பட்டுள்ளது.

ஒரு ராசியின் பாகைகள் (டிகிரி) = 30 பாகைகள்

ஒரு நட்சத்திரம் = 13 பாகைகள் 20 கலைகள்

60 கலை = 1 பாகை

இராசி மண்டலத்தில் இடம் பெற்றுள்ள இராசிகளும் அவற்றின் டிகிரிகள் மற்றும் இராசி ஒவ்வொன்றுக்கும் சரிசமமாக பிரித்து கொடுக்கப்பட்ட நட்சத்திர பாதங்கள் பின்வருமாறு.

**மேஷ ராசி: 0 to 30 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்

அஸ்வினி: 1,2,3,4

பரணி: 1,2,3,4

கிருத்திகை: 1

**ரிஷப ராசி: 30 to 60 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்

கிருத்திகை: 2,3,4

ரோகிணி: 1,2,3,4

மிருகசீரிடம்: 1,2

**மிதுன ராசி: 60 to 90 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்

மிருகசீரிடம்: 3,4

திருவாதிரை: 1,2,3,4

புனர்பூசம்: 1,2,3

**கடக ராசி: 90 to 120 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்

புனர்பூசம்: 4

பூசம்: 1,2,3,4

ஆயில்யம்: 1,2,3,4

**சிம்ம ராசி: 120 to 150 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்

மகம்: 1,2,3,4

பூரம்: 1,2,3,4

உத்திரம்: 1

**கன்னி ராசி: 150 to 180 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்

உத்திரம்: 2,3,4

அஸ்தம்: 1,2,3,4

சித்திரை: 1,2

**துலாம் ராசி: 180 to 210 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்
சித்திரை: 3,4
சுவாதி: 1,2,3,4
விசாகம்: 1,2,3

**விருச்சிக ராசி: 210 to 240 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்
விசாகம்: 4
அனுஷம்: 1,2,3,4
கேட்டை: 1,2,3,4

**தனுசு ராசி: 240 to 270 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்
மூலம்: 1,2,3,4
பூராடம்: 1,2,3,4
உத்திராடம்: 1

**மகர ராசி: 270 to 300 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்
உத்திராடம்: 2,3,4
திருவோணம்: 1,2,3,4
அவிட்டம்: 1,2

**கும்ப ராசி: 300 to 330 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்
அவிட்டம்: 3,4
சதயம்: 1,2,3,4
பூரட்டாதி: 1,2,3

**மீன ராசி: 330 to 360 டிகிரி**

நட்சத்திர பாதங்கள்
பூரட்டாதி: 4
உத்திரட்டாதி: 1,2,3,4
ரேவதி: 1,2,3,4

## அஸ்வினி நட்சத்திரம்



நட்சத்திரத்தின் இராசி: மேஷம்
நட்சத்திரத்தின் அதிபதி: கேது
இராசியின் அதிபதி: செவ்வாய்

**பொதுவான குணங்கள்:**

- செவ்வாய்க்கு உரிய கோபம் மற்றும் பிடிவாத குணம் கொண்டவராக இருப்பார்கள்.
- சண்டையில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும், அயராத உழைப்பை கொண்டு வெற்றி பெற வேண்டும் என்னும் தீவிரம் கொண்டவர்களாக இருப்பார்கள்.
- பெண்களிடம் இனிமையாக பேசக்கூடியவர்.
- இவரை அவமதித்தால் மனதில் பழிவாங்கும் எண்ணம் உடையவராக இருப்பார்கள்.

- தவறுக்காக மன்னிப்பு கேட்கும் இயல்பு உடையவர்கள்.
- எந்த காரியத்தையும் தைரியத்துடன் செய்து முடிப்பவராக இருப்பார்கள்.
- தனது தாய் தந்தையர் மீது ஓரளவு பாசம் உடையவராக இருப்பார்கள்.
- அழகும், முரட்டுச் சுபாவமும் உடையவராக இருக்கக்கூடும்.

### அஸ்வினி முதல் பாதம்:

- இவர்களிடம் அஸ்வினி நட்சத்திரத்திற்குரிய பொதுவான குணங்களும் இருக்கும். மேலும் கீழ்க்கண்ட சில குணங்களும் இருக்கும்.
- அதிக கோபம் மற்றும் பிடிவாத குணம்.
- அடிக்கடி சண்டையில் ஈடுபடுவது.
- சொத்து சேர்க்கை உண்டாகும்.
- எடுத்த காரியத்தில் வெற்றி.

### அஸ்வினி இரண்டாம் பாதம்:

- இவர்களிடம் அஸ்வினி நட்சத்திரத்திற்குரிய பொதுவான குணங்களும் இருக்கும். மேலும் கீழ்க்கண்ட சில குணங்களும் இருக்கும்.
- சாந்தகுணம் மற்றும் பொறுமைசாலியாக இருப்பார்கள்.
- மனைவியின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.
- உயர்ந்த புகழ் மற்றும் கௌரவத்தை அடைவார்கள்.

### அஸ்வினி மூன்றாம் பாதம்:

- இவர்களிடம் அஸ்வினி நட்சத்திரத்திற்குரிய பொதுவான குணங்களும் இருக்கும். மேலும் கீழ்க்கண்ட சில குணங்களும் இருக்கும்.
- இவர்கள் தைரியசாலிகளாக இருப்பார்கள்.
- சாதுர்யமான பேச்சுத் திறமை கொண்டவர்கள்.
- கல்வி மற்றும் நுட்பமான ஆராய்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள்.
- வாதம் செய்வதில் வல்லவர்கள். கற்பனையில் சிறந்தவர்கள்.
- அன்னையின் மீது அதிக அன்பு கொண்டவர்கள்.

### அஸ்வினி நான்காம் பாதம்:

- இவர்களிடம் அஸ்வினி நட்சத்திரத்திற்குரிய பொதுவான குணங்களும் இருக்கும். மேலும் கீழ்க்கண்ட சில குணங்களும் இருக்கும்.